புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

விரோதி ௵ (1889) ஆவணி ௴ ௨௨௳ ஆரம்பமானது.

# THE HINDU ORGAN.

## குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திராதிபம்.**

(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)

| | |
|---|---|
| யாழ்ப்பாணப்பட்டினம்: ஆ ௧-க்கு | ரூ. ௨-௨௫. |
| வெளியூர், இந்தியா: | " ரூ. ௩-௨௫. |
| தொலைப்பகுதி: | " ரூ. ௩-௭௫. |
| தனிப்பிரதி | சதம் -௧௫. |

**விளம்பர விகிதம்.**

| | | ரூ. ச. |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ௪-௫0. |
| " | அரைக்கலம் | ௭-00. |
| " | காற்கலம் | ௨-௫0. |
| " | ஒருஅங்குலம் | -௫0. |

அரிச்சமுறைகட்குக் குறைவு விகிதங்களில் அறைவாகும்.

புத்தகம் - ௨௮. { யாழ்ப்பாணம்:—தளௌல் ஆடி௴ ௧௨௳ ௧௯௧௬-ம்௵ ஜூலை௴ ௨௭௳. } இலக்கம்—௪.


௨

### கணபதி துணை.

சீர்பூத்த கருவிஞு அணர்ச்சி தேங்கச் சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ளீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் ஞேறு மதம்பூத்த விநாயகன்ருள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர நாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


### விளம்பரம்.

## THE CHEAPEST HOUSE FOR HIGH CLASS SILK CLOTHS.

:o:

**நம்பிக்கையும், நாணயமும், சகாயமுமான பட்டுவர்த்தகசாலை எது?**

**காசியிற் பிரபல பட்டுவர்த்தகர்களாகிய கே. எஸ். முத்தையா கம்பெனியார்**
என்று தெரிந்துகொள்ளுங்கள்.

இங்கு, அநேக நவீன கலர்களிற் புதுமாதிரியான பட்டுப்புடைவைகள், ரவிக்கைக் குட்டைகள், தாவணிகள், பிள்ளை (பஸ்க்காரு) வேட்டிகள், தலைக்குட்டைகள், நார்மடித் தினிசுகள், வெண்பட்டு தோத்தி, அங்க வஸ்திரம், சோமன் ஜோடி முதலிய பலவிதமான பட்டாடைகளுஞ் சகாயமான விலைக்குச் சித்தமாக விருக்கின்றன. விபரமான கேட்லாக் விரும்பினுல் இனுமாகப் பெற்றுக்கொள்ளலாம். உடனே எழுதுங்கள்.

**K. S. Muthiah & Co.,**
"Silk House",
BENARES, CITY.


## பனைமரங்கள்.

நூறு பனை மரங்களிலிருந்து ௫00 ரூபா பெறுமதியான வரும்படி பெறலாம்.

இது நூறு மரங்களிலிருந்து வரக்கூடிய வரும்படியின் சராசரி மதிப்பு. இது தென்னைகளிலிருந்துவரக்கூடிய வரும்படியிலும் அதிகம். தக்க முயற்சி செய்தால் யாழ்ப்பாணத்திலே இலங்கையின் மற்றெந்தப் பகுதிகளிலும்பார்க்கப் பனைமரங்களிலிருந்து அதிக லாபம் பெறலாம்.

இடைவிடாது கள்ளுக் கட்டினுல் மரத்துக்குமரம் வித்தியாசமின்றி எந்தமரத்திலும் ஒரேமாதிரியாகக் கள்ளுச் சேர்க்கலாம். முதல் வருஷத்தில் இப்படி இல்லாதிருக்கக்கூடும். ஆனுல் இரண்டாம் வருஷத்தில் எந்த மரத்திலும் கள்ளு நல்லாய்ச் சேர்க்கலாம். இரண்டாம் வருஷப் பலனையடைவதற்கு முதலாம்வருஷத்தில் நல்லவேலை செய்ய வேண்டும்.

இரண்டாம்வருஷத்தில் நூறு நாட்களுக்காகுதல் ஒவ்வொரு மரத்திலுமிருந்து ஒவ்வொரு கலன் கள்ளுச் சேர்க்கலாம். ஆகவே நூறு மரங்களிலிருந்து ௧0,000 கலன் கள்ளுச் சேர்க்கலாம்.

ஒவ்வொரு கலன் கள்ளிலிருந்தும் ஒன்றேடு ஐந்திலொரு ரூத்தல் பனங்கட்டி செய்யலாம். ஆனுல் ஒருரூத்தல் வீதப்படி கணக்கிட்டாலும் ௧0,000 ரூத்தல் அல்லது ௨00 கண்டி பனங்கட்டி செய்யலாம்.

குறைந்தபட்சமாக கண்டி ஒன்று ரூபா உடுவீமதாகப்பார்த்தாலும் நூறு மரங்களிலிருந்து ௫00 ரூபா வரும்படி பெறலாம்.

இதைப்பற்றி முழுவிபரங்களு மடங்கியுள்ள பிரபந்தங்களை எங்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—
இலங்கைச் சீனிக் கம்பனியார்,
வல்லுவெட்டித்துறை.


### கட்பார்வை.

குளிர்ச்சியான சந்திரகாந்த வில்லைபோட்ட கண்ணுடிகளைப்பாவித்துப் பார்வையைக்காப்பாற்றுங்கள்.
திறமான மூக்குக் கண்ணுடிகள் எங்களிடம் சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எம் கல்லைனா அன் சன்ஸ்,
பறங்கித்தெரு,
யாழ்ப்பாணம்.

## S. U. N. & Co.
**Weaving Silk Manufacturers, BENARES CITY, U. P.**

பெரிய கம்பெனி. நாணயமான சரக்குகள்

இந்தக் கம்பெனியில் செய்யாகிற உத்தமமான பனாரிஸ் பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், பஸ்காரு, காஷ்மீர் போர்வைகள், குத்திராட்சங்கள், குழந்தைகளின் விளையாட்டுச்சாமான்கள் முதலான அபூர்வமான சாமான்களைப் பற்றிய 68 பக்கமுள்ள ஒரு "காட்லாக்"கும் ஒரு காலைபரவர் கயறும் கோருகிறவர்களுக்கு இனுமாய் அனுப்பப்படும்.




எஸ்.யூ.என். அண்டு கம்பெனி,
பனாரிஸ் ஸிற்றி.

### பம்பாய்ச் சேலைகள்.

மிகவும்நாணயமானது! மிகவும்சாசமானது!!
16 முழ நீளம்.



இந்தச் சேலைகள் சேர்த்தியான வெள்ளை மல்லில் மத்தியில் மாங்காய், அன்னம், கிளி, சூரியப்பிறை, சந்திரப்பிறை, நக்ஷத்திரம், புட்டாக்கள்; இவைகள்போல்ஒவ்வொரு சேலைகளிலும் ஒவ்வொருவிதமுண்டு. கரைகளிலும் முந்தானைகளிலும் விசித்திரமான புஷ்பக் கொடிகள் போட்டிருக்கும். இந்தச் சேலைகள் பம்பாயிலிருந்து ஸ்பெஷலாகக் கொஞ்சந்தான் தருவித்திருக்கிறோம். வேண்டியவர்கள் கூடிய சீக்கிரத்திற் தருவித்துக்கொள்ளவும். செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்ப முடியாது. சேலை 1-க்கு கிரயம் ரூபா 2, அணு 4.

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட்,
மதராஸ்.

ஆறுமுகநாவலரவர்களால் அச்சிற்பதிப்பிக்கப்பட்ட தமிழ்ப்புத்தகங்கள் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலையில் விற்கப்படும்.
V. P. போஸ்டில் அனுப்பவேண்டுவோர் தபாற்செலவுமாத்திரம் கூட்டி அனுப்பல் வேண்டும்.

### விளம்பரம்.



**மிகவும் கீர்த்திபெற்ற கேசரஞ்சிததைலம்.**

இது ரோமத்திலுள்ள சகல ரோகங்களையும் போக்க வல்லது. தலைவலியை நீக்க வல்லது. இந்த அரிய எண்ணெயை உபயோகித்தால் கேசம் ஒருவாரம் ஒரு அங்குல நீளவிகிதம் வளர்ந்து அடர்த்தியாகும். இது குளிர்ச்சியையும் மூளைக்கு ஆறுதலையும் தருமியல்புடையது. ஒரு போத்தல் எண்ணெயின் விலை ரூபா ௧. தபாற்கூலி அணு ௫.

**பிரமேகபிந்து.**

இது மேகநோய் காரணமாகவுண்டாகும் சகலவியாதிகளையும் அதிகவிரைவில் நீக்கவல்லது. இது உண்போரின்கொடிய நோயை நீக்கி அவர்களுக்குத் திடத்தையும் ஆறுதலையும் ஆரோக்கியத்தையுந் தருவது. ஒருபோத்தல் மருந்துக்கும் ஒரு பெட்டி குளிகைக்கும் ஒருக்கு விலை ரூபா ௧. அணு ௮. தபாற்செலவு அணு ௭.

**"ஹைட்றசீ"லுக்கு விசேஷமருந்து**

இம்மருந்து இந்த நோயால் உண்டாகும் உபத்திரவத்தை இலகுவில் மாற்றிவிடும். இது வீக்கத்தை வற்றச்செய்து அவ்வீக்கத்துடன் உண்டாகும் சுரத்தையும் வரவொட்டாது தடுக்கத் தக்கது. இந்நோய் உண்டாகி ஒருவருட காலம் மாத்திரஞ் சென்றிருந்தால் இரண்டு பெட்டி மருந்துடன் நோய் சொஸ்தமாய் விடும். நோய் ஒருவருட காலத்திற்கு மேற்பட்டதாயிருந்தால் கொஞ்சம் கூடிய காலத்திற்கு மருந்து சாப்பிட வேண்டும். இருபெட்டி மருந்தும் ஒருபோத்தல் எண்ணெயும் விலை ரூபா ௨. தபாற் செலவு அணு ௬.

வியாதிகளினதும் மருந்துகளினதும் விபரமடங்கிய "கற்லக்கு"கள் வேண்டியவர்களுக்கு இனுமாயனுப்பப்படும்.

வியாதிகளைப்பற்றி சுருக்கமாயெழுதியறிவித்தால் மருந்தோடு அல்லது மருந்தில்லாமல் இந்தியா, பேர்மா, இலங்கை, தொடுவா யிராச்சியம் முதலியஇடங்களுக்கு "பிறிஸ்கிறிப்ஷன்"(Prescreption) அனுப்பப்படும்.

KAVIRAJ N. N. SEN,
GOVT. MEDICAL DIPLOMA HOLDER,
18-1 & 19, Lower Chitpur Road,
CALCUTTA.

## இந்துஸ்தான் ஐக்கிய வீமாக் கம்பனி.

இதன் பிரதான ஆபீஸ்: இந்துஸ்தான் கட்டடம், கல்கத்தா.

இதன் மூலதனம் பத்துக்கோடி ரூபா.

இந்தியாவிலே பங்காளிகளுக்கு அதிகலாபத்தைக் கொடுக்கக்கூடிய கம்பனி இதுவன்றி வேறில்லை. சனசையின் சொந்தமாயுள்ள வீமாக்கம்பனி இதுவொன்றே.

இதில் வீமாத்தீர்பவர்களுக்கு ஒருபோதும் நட்டம் வரமாட்டாது. அவர்கள் இக்கம்பனிக்கு வரும் லாபத்திலும் பங்குடையவர்களாவார்.

ஆண் பெண் என்னும் வித்தியாசமும், பயண வித்தியாசமும், தொழில்வித்தியாசமும், மரண வித்தியாசமும் இக்கம்பனியாராற் கவனிக்கப்படமாட்டாது.

பணங் கட்ட முடியாது தங்கள் "பொலிசிகளை" விட்டுவிடுவோர்க்கு மற்றக் கம்பனிகள் கொடுக்கும் தொகையிலும் பெருந்தொகை உடனே கொடுக்கப்படும். அல்லது அவர்களின் மரணத்தின்பின் அவர்களாற் குறிக்கப்படுவோர்க்குக் கொடுக்கப்படும்.

பணங்கட்டாதுவிட்ட "பொலிசி"களைக் காலவரையின்றி நினைத்தநேரத்திற் புதுப்பித்துக் கொள்ள இடங்கொடுக்கப்படும்.

கட்டப்படும் பணம் இருக்குக் கொடுக்கப்படவேண்டுமோ அவருடைய சொந்த வீட்டில் அது கொடுக்கப்படும்.

உத்தியோகஸ்தருள்ளும் சங்கத்திலும் தலைத்தரமான பிரபுக்களிருக்கிறார்கள்.

இக்கம்பனிக்குச் கட்டவேண்டிய தொகை சிறிது, லாபமோ அதிகம்.

இக்கம்பனியிலும்பார்க்க ஒருவனின் சுயவிருத்திக்கு ஏற்றதாகத் தோற்றமெதுவும் அனுப்புதலுக்கும் கட்டத்துக்கும் ஏதுவானதாகவேயிருக்கும்.

இக்கம்பனிக்கு அக்கிராசனுதிபதி: கௌரவ மகாராஜா மகிந்திரசந்திரநந்திபகதூர்.

செக்கிறிற்றெறி: சுரேந்திரநாத்தகூர் B A, ஜமீந்தார்.

மற்றைய விபரங்கள் பின்சொல்லப்படுகிறவர்களுக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

(பருத்தித்துறைப்பகுதிக்கு முகாமைக்காரன்)
ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை,
யாழ்ப்பாணம் இந்துகல்லூரித் தமிழ்ப்பண்டிதர்,
வல்வெட்டித்துறை.

M. A. தம்பு அன்ட் பிறதர்ஸ்
பிரதான முகாமைக்காரர்,
1 செப்பசர் தெரு, 13 B, 1-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு.

யாழ்ப்பாணத்துக்கு உப முகாமைக்காரர்: யாழ்ப்பாணம் வர்த்தகசங்கம்.

P. S. வீமாத்தீர்க்கவர்கள் தாங்கள்கட்டவேண்டியபணத்தை நேரே எங்களுக்கு அனுப்பவேண்டும்.



### விளம்பரம்.

௧௯௧௬ம் ஆ நவம்பர்மீ ௧உ தொடக்கம் ஒரு வருடத்திற்கு: கண்டி, கட்டுகாஸ்தோட்டை, மாத்தளை முதலிய டிஸ்திறிக்குகளில் பகிரங்க வேலைப் பகுதியாரின் பாவிப்புக்கு மிகத் திறமான கல்லுண்டை அரிசி கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடதாசிகள் ௧௯௧௬ம் ஆ ஆகஸ்டுமீ ௧௫உ மத்தியானம்வரைக்கும், ஒப்பந்தக் கேள்வி விசாரணைச் சங்கத் தலைவரால் அரசிறை வருமானத் தலைவர் கந்தோரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் இந்தமீ ௧௪உ வெளிப்பட்ட கவண்மேந்தார் 'கசற்' பத்திரிகையிற் பார்த்துக்கொள்ளலாம். அல்லது கண்டிப் பிரதான இஞ்சினீரிடம் எழுதி அறிந்துகொள்ளலாம்.



### விளம்பரம்.

௧௯௧௬ம் ஆ நவம்பர்மீ ௧உ தொடக்கம் ஒரு வருடத்திற்கு: வவனியாவிலும், மன்னாரிலுமுள்ள பகிரங்கவேலைப்பகுதியாரின் உபயோகத்திற்காக முதற்றரமான கல்லுண்டை அரிசி அல்லது முதற்றரமான வெள்ளைச் சம்பா அரிசி தருவிக்க விரும்புவோரிடமிருந்து, இன்றுதொடக்கம் ஆகஸ்டுமீ ௧௫உ மத்தியானம் ௧௨ மணிவரையும் அரசிறை வருமானக் கந்தோரில் ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் ஒப்பந்தக் கேள்விச் சங்கத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்படும்.

இதைப்பற்றி வேறு விபரங்கள் அறியவிரும்புவோர் ஜூலைமீ ௧௪உ வெளிவந்த கவண்மேந்து 'கசற்' பத்திரிகையிலாவது வடமாகாணப் பிரதான இஞ்சினீரிடமிருந்தாவது அறிந்துகொள்ளலாம்.



### விளம்பரம்.

மட்டக்களப்பு, கல்முனை, திரிகோணமலை டிஸ்திறிக்குகளில் பகிரங்கவேலைப் பகுதியாரின் பாவிப்புக்கு மிகத் திறமான கல்லுண்டை அரிசியும், வெள்ளை அரிசியும் கொடுப்பதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடதாசிகள் ஒப்பந்தக் கேள்வி விசாரணைச் சங்கத்தலைவரால் அரசிறை வருமானத் தலைவர் கந்தோரில் ௧௯௧௬ம் ஆ ஆகஸ்டுமீ ௧௫உ மத்தியானம் வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான வேறு விபரங்கள் ௧௯௧௬ம் ஆ ஜூலைமீ ௧௪உ வெளிப்பட்ட கவண்மேந்தார் 'கசற்' பத்திரிகையில் பார்த்துக் கொள்ளலாம். அல்லது மட்டக்களப்புப் பிரதான இஞ்சினீருக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.



### விளம்பரம்.

அனுராசபுரம், மினிக்கலை, மருதங்கடவை டிஸ்திறிக்குகளின் பகிரங்கவேலைப் பகுதியாரின் உபயோகத்திற்காக திறமான கல்லுண்டை அரிசியும் வெள்ளை அரிசியும் 1916 ம் ஆ நவம்பர்மீ 1ம் தொடக்கம் ஒருவருஷ காலத்திற்கு கொடுக்கிறதற்கு ஒப்பந்தக்கேள்விப்பத்திரங்கள் அரசிறை வருமானத் தலைவருடைய ஆபீசில் ஒப்பந்தக் கேள்வி விசாரணைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும். இப்பத்திரங்கள் மேற்சொல்லப்பட்ட ஆபீசில் 1916 ம் ஆ ஆகஸ்டுமீ 15ம் முற்பகல் 12 மணிக்குமுன் கிடைக்கவேண்டும்.

இன்னும் வேண்டிய விபரங்களை ஜூலைமீ 21௳ வெளியான "கவண்மேந்துக் கசற்" பத்திரிகை மூலமாய் அறிந்துகொள்ளலாம். அல்லது அனுராசபுரம் பிரதான இஞ்சினீரிடம் அறிந்துகொள்ளலாம்.



### விளம்பரம்.

சிலகாலமாக நிறுத்தியிருந்த நெல், அரிசி வியாபாரத்தைத் திரும்பத் தொடங்கியிருக்கிறோம்.

எங்கள் பற்று வரவுகாரர் இதனைக் கவனிப்பார்களாக.

JAFFNA TRADING CO, LTD.



ஜோதிடர்

## வி சபாபதி ஐயரவர்கள்

இயற்றிய

## ஜாதகபாஸ்கரன்

இரண்டாம்பதிப்பு

வேளியாகிவிட்டது! வேளியாகிவிட்டது!!

ஐயரவர்கள் எழுதிவைத்த அநேக விஷயங்கள் இப்பதிப்பிற் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

விலை ரூபா 3-50.

மானேசர்,
பாஸ்கரயந்திரசாலை,
யாழ்ப்பாணம்.


### பத்திரக்கிரய வரவு.

| ஸ்ரீ. | | ரூ. ச. |
|---|---|---|
| ,, உ. ச. சதகுருதம்பி, | மன்னார் | 5-00 |
| ,, P. L. பழனிஆண்டி, | கம்பளை | [illegible] |
| ,, R. S. குழந்தைவேல், | Dolosbage | 1-62 |
| ,, A. M. கறுப்பசாமி, | புசலாவை | 5-00 |
| ,, மு. சுப்பிரமணியம், | மதவாச்சி | 3-25 |
| ,, A. சுவாமிநாதபிள்ளை, | Galaha | 6-50 |
| ,, E.N. சின்னத்துரை, | எட்டியாந்தோட் | 3-25 |
| சைவவித்தியாசாலை, | கொல்லங்கலட்டி | 1-12 |


# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்:- நள ஆடிமீ ௨௨௨.


## சிவ பரத்துவம். ௬.

சிவபெருமானே பரம்பொருள் என்னுந் துணிபை வெளிப்படையாகச் சாதித்தற்குரிய வேதவாக்கியங்கள் பின்னர் எடுத்துக் காட்டப்படும். ஆனால் வேதக்கொள்கைகளை வலியுறுத்திச் சாதிக்குமாறே புராணங்கள் எல்லாம் எழுந்தன என்பது நம்மெல்லார்க்கும் உடம்பாடாதலின், நம்மனைவர்க்கும் உரியனவாகிய அந்தப் புராணங்களைக் கொண்டே சிவபரத்துவம் முந்தச் சாதிக்கப்படவேண்டியது. ஆனதுபற்றியே நாம் முதற்கட் புராணக்கொள்கைபற்றிச் சிவபரத்துவத்தைச் சாதிக்குமாறு எடுத்துக்கொண்டதென்க. நாம் இங்கே எடுத்துக்காட்டும் புராணவாக்கியங்கள் தாமும், பௌராணிகரது அபிப்பிராய மாத்திரையாகாது வேதவாக்கிய அநுவாதங்களாகவே அமைந்து கிடத்தலின், அவைகள் எல்லாம் வேதங்களை நன்குகற்ற பௌராணிகரது சாட்சியங் கொண்டு எடுத்துக் காட்டப்படும் வேதவாக்கியங்களேயாம் என்பது எல்லாருங்கவனிக்கத்தக்கது. அற்ப அறிவுடையேமாகிய நம்போலியரது சாட்சியத்திலும் வேதத்துறைகளிற் பெரிது பயின்றுள்ள பௌராணிகரது சாட்சியம் மிகவலியுடைத்தென்பது நாம் சொல்லிக்காட்டவேண்டியதில்லை.

வேதசாரங்கள் தேங்கி வழியப்பெற்றுள்ள காந்த மகாபுராணத்தின் ஒருகூறுயுள்ளதும், வடமொழி தென்மொழிக் கடலை நிலைகண்டுணர்ந்த மாதவச் சிவஞான முனிவரால் மொழிபெயர்த்தியற்றப்பட்டதுமாகிய காஞ்சிப்புராணத்திலே இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் தனித்தனியே சிவபெருமானைப் பரம்பொருள் என்று எடுத்துக்காட்டும் என்பது வெள்ளிடைமலைபோலத் தெள்ளிதின் விளக்கப்பட்டிருக்கின்றது.

எச்சன்றனக்குபிரமயோர்க்குமெவ்வேதியர்க்கு
அச்சங்கரனேயரசன்விரவாதிதகன்சிர் ...ம்
நச்சுமுனையின்றருட்பார்வையிலேனுச்சிகல்கும
மெய்ச்சிவத்துவென்றறியென்றறிருக்குவேதம்.

தன்கூற்றில்வருங்கணாதர்தடுக்கலாற்றக்
கொன்கூர்சாபதியால்வயக்கூறும்விண்ணோர்
வன்காழ்வலிசெற்றவன்யாரவனேமதிக்கும்
நன்காரணமென்றுரகவின்றதுத்தவேதம்.

தோலாவணைவநாப்பணடைந்துதிரும்புநட்டு
மாலாதிவிண்ணோர் வலிமுற்றுமாற்றவல்லோன்
ஆலாலமுண்டோனவனேயிலங்களுக்கு
மேலாயவேதுவெனவிண்டதுசாமவேதம்.

வளிதாழ்விசும்பைப்பசுந்தோலிற்சுருட்டவல்லோர், உளரேற்புடைவீங்கியெழுந்துதிருண்டிருண்ட, இளவெம்முலைபங்கனையன்றியுமின்பமுத்தி, யளவிற்பெறலாமெனவிண்டதர்வவேதம்.

வேதங்கள் தம்மாலும் அங்கீகரிக்கப்பெற்ற புராணங்கள், அவ்வேதங்களின் துணிபு இதுவென்று எடுத்துக்கூறும் சாட்சியத்தை நம்புவதா, அல்லது அவ்வேதங்களின் சாராம்சத்தைத் தாமும் கனவிலும் அறியாது யானை கண்ட குருடர்போல மயங்கித் தியங்கும் கற்பனுசமயிகள், சிலரது சாட்சியத்தை நம்புவதாமுறையாகும்? சைவசமயிகளே! சற்றுலோசியுங்கள். இந்தக் கற்பனுசமயிகள் வேதத்தைப்பற்றி யாதாவது அறிந்திருப்பதுண்டாயின், அவர்கள் அங்ஙனம் அறிந்ததெல்லாம் மேலைத்தேச வாசியாகிய கிறிப்பித் (Griffith) என்பவர் செய்த இருக்குவேத மொழிபெயர்ப்புக் கொண்டேயாம். இந்தக் கிறிப்பித் என்பவருக்கு வேதத்தின் சுத்தப் பிரதி அகப்பட்டதுண்டோ என்பது முதற்கேள்வி. வேதங்களைத் தங்கள் உயிரிலும் சிறந்த பொருளாகக் கவனித்து, அவற்றை அவற்றின் பெயருக்கிணங்க அந்தரங்கத்தில் வைத்துப் பூசித்து வருகின்ற இந்தியர்கள், புறச்சமயத்தவரும் பிறதேசத்தவருமாகிய ஒருவருக்கு அவற்றின் சுத்தப்பிரதியை மனம் ஒருப்பட்டுக் கொடுத்திருத்தலும் கூடுமோ என்பது நாம் எல்லாம் ஊன்றிச் சிந்திக்கவேண்டியதோர்விஷயம். இனி அப்படித்தான் ஒரு சுத்தப்பிரதியைக் கிறிப்பித் என்பவர் ஒருவாறு பெற்றுக்கொண்டாராயினும், அவ்வேதங்களின் அந்தரங்க பொருளமைதியை அவருக்கு யாராகிலும் சொல்லிக்கொடுத்தலும் கூடுமோ என்பது இரண்டாவது கேள்வி. வேதப் பொருள்களைச் சிஷ்யக்கிரமமாகக் குருவையடைந்து பல நெடுங்காலத்துக்குப் பணிசெய்து தொண்டுபூண் டொழுகுவார்க்கன்றிச் சொல்லிக்கொடாத இந்தியர்கள், அந்நிய சமயத்தவரும் அந்நியதேசத்தவரும் அத்தோடு கோமாமிசபட்சணியுமாகிய கிறிப்பித் என்பவருக்குச் சொல்லிக்கொடுத்திருப்பார்கள் என்று நாம் ஒருபோதும் நம்புவது கூடாது. ஆகவே இக் கிறிப்பித் என்பவருக்குக்கிடைத்த இருக்குவேதப் பிரதியும், அவர்செய்த மொழிபெயர்ப்பும் ஆரியசமயத்தின் அருமையை அறியாத இந்தக் கற்பனுசமயிகளுக்கன்றி நமது சமயிகளுக்குச் சிறிதேனும் ஏற்புடைத்தாகமாட்டாது. இவர்கள் இந்த மொழிபெயர்ப்புக்கொண்டு எமது சமயத்தை ஆராய்வது "நரிவால்கொண்டு கூவல் ஆழங்கண்ட" கதைபோலாகும்.

வேதங்களையும் அவற்றுக்கு அங்கங்களாயுள்ள சாத்திரங்களையும் எழுத்தெண்ணிப் படித்த பிரபல பண்டிதோத்தமர்களாகிய ஸ்ரீ. அரதத்தாசாரியர் முதலியோர் செய்த "சிவதத்துவ விவேகம்" "சிவகர்ணாமிர்தம்" "சதுர்வேததாற்பரிய சங்கிரகம்" முதலிய சாத்திரங்களை இந்தக்கற்பனுசமயிகள் ஒருசிறிதாவது அறிந்திருந்தால், இவற்றுல் சிவபரத்துவம் வேதோக்தமாகச் சிலையில் எழுத்துப்போல காட்டப்பெற்றிருப்பதை நன்கறிந்திருப்பர். இந்தச் சாத்திரக் கருத்துகளை ஒருசிறிதாயினும் அறியும் ஆற்றலின்றிச் சைவசமய சாத்திரங்களிற் தாம் மிகப் பயின்றார்போன்று தம்மவர்க்கு நடித்துக் காட்டுவது இவருக்கு நீதியாகமாட்டது. ஒருபோது இச்சாத்திரக் கருத்துகளைக் "குரங்குகெதி விளங்காயாக" அறிந்துகொள்வது இவர்களது நோக்கமாக இருக்கலாம். ஆனால் இவர்போலியர்க்கு எமது வேதக்கருத்துகளை நாம் ஒருபோதும்சொல்லமாட்டோம் என்பது இவருக்கே நன்கு தெரியுமன்றோ. இதுநிற்க.

வேதங்களிலே சிவசப்தம் இல்லை என்றே வைத்துக்கொள்வோம். அதனால் எமது சமயத்துக்கு எய்தற்பாலதாகிய குறைவு ஒன்றும் இல்லையே. வேதங்கள் பொதுநூல்களாதலின் அவற்றின் பொருட்கிடக்கையை ஆகமங் கொண்டே அறிதல்வேண்டும் என்பது நமது சமயத்துணிபாதலின், வேதங்களிலே எடுத்துப் பேசப்பட்ட பிரமமும் ஆகமங்களிலே எடுத்துப் பேசப்பட்ட சிவமும் ஒன்று தானே என்பதே நாமெல்லாம் சிந்திக்க வேண்டியது. இவை இரண்டும் ஒன்றே என்பது அவற்றைக் குறித்து அவ்விருவகைச் சுருதிகளிலும் விளக்கப்பட்டுள்ள விளக்கங்களாலும், குறியீடுகளாலும், அவ்விருபொருளையும் காட்டுதற்காக வழங்கப்பட்டுள்ள பெயர்க்காரணங்கள் தம்மாலும் நாமெல்லாம் நன்கறியக் கிடக்கின்றதன்றே. இங்ஙனமாக "முருங்கையடி மாலுமிலைப்"போலச் சிவசப்தங் காட்டப்படுதல் வேண்டும் என்று கேட்டுக்கொள்வது என்கருதியோ? கிறிஸ்தவர்களுடைய பழைய ஏற்பாட்டிலே கிறிஸ்துவுடைய பெயர் எங்காவது காட்டப்பட்டதுண்டோ? காட்டப்படாமையால் கிறிஸ்துவைப் பழைய ஏற்பாட்டுக்குரிய தெய்வம் அல்ல என்று இந்தக் கற்பனுசமயிகள் ஒப்புக் கொள்வரோ? அவர்களே சொல்லட்டும்.

## அநாகரிக வணக்கம்.

(Communicated.)

உலகத்தில் ஆதியிலே சனங்கள் எல்லாரும் நாகரிகமற்ற வனசரர்களாகவே இருந்தார்கள் என்றும், அப்படி இருந்த காலத்திலே அவர்கள் மிருகங்களையும் வனதெய்வங்களையும் வணங்கிவந்தார்கள் என்றும், அந்த வணக்கங்களுள் ஒன்றே விநாயகவணக்கம் என்றும் சில கிறிஸ்தவர்கள் வாதிக்கிறார்கள். இவர்கள் இப்படி வாதிப்பதற்கு ஆதாரம் இவர்களுடைய நவீன விவேகமன்றிப் பிறிதொன்றுமில்லை. இந்தியாவுக்குரிய புராதன சாத்திரங்களாகிய வேதங்களிலாவது புராணங்களிலாவது இந்தக் கொள்கைக்குச் சார்பாகிய வாக்கியம் ஒன்றேனும் இல்லை இந்தியாவின் பூர்வீக சரித்திர முறையை ஆராய்ந்து வெளிப்படுத்திய சரித்திராசிரியர் யாராவது இந்தக்கொள்கைக்குச் சார்பாகிய யாதொரு அபிப்பிராயத்தைவெளிப்படுத்தியிருக்கவில்லை. ஆனால் இந்தியாவின் பூர்வீகத்தைப்பற்றி விளக்கும் சாத்திரங்களும், அதன் பூர்வ சரித்திரத்தை ஆராய்ந்துசென்ற ஆசிரியர்களும், அதன் பூர்வ நாகரிக மாட்சியைக் குறித்து மிக வியந்து பேசுவதுமாத்திரமன்றி, அதன் பூர்வ சமயக் கொள்கைகளிலே அநேக தத்துவார்த்தங்களும், பல அந்தரங்கமான ஆன்மிக நைவிகத் துறைகளும் அமைந்துகிடக்கின்றன என்றும், சமயஞானத்தளவிலே இந்தியாவுக்குச் சமமாகவேனும் மேலாகவேனும் யாதொரு தேசம் எக்காலத்தும் இருந்ததில்லை என்றும், இந்தியாநாடுதானே உலகம் அனைத்துக்கும் சமயஞான தானம் செய்ததென்றும் மிகவற்புறுத்திச் சாதித்தலை நாம் பூரணமாகக் காணலாம். இங்ஙனம் சிறப்புற்று விளங்கும் இந்தியாதேசத்தின் சமயத்தை மிருகவணக்கத்துக்குரிய சமயம் என்று துணிவோடு சாதிக்கப் புறப்பட்டுகிற்கும் கிறிஸ்தவர்களுடைய அறியாமையும் அழுக்காறும் எவ்வளவு முறுகித் தடித்திருக்கின்றன என்பதை அறிவுடையோரே மதித்துக் கொள்ளட்டும். அதுநிற்க.

இந்தக் கிறிஸ்தவர்கள் இங்ஙனம் சாதிக்கத் துணிவதெல்லாம் இந்தியாதேசத்துக்குரியதாகிய இந்துமதம் அநாகரிகமாக்களாலே அறிவிற்குறைந்தகாலத்தில் ஏற்படுத்தப்பட்டதோர் சமயமாதலின் அது கைக்கொள்ளற்பாலதல்ல என்று காட்டிவிடுமாறன்றோ? இங்ஙனமாயின் இவர்களது கிறிஸ்துமதத்தை இவர்கள் எடுத்தாளும் சரித்திரமுறை கொண்டே நாமும் ஆராய்ந்துபார்ப்போம். இவர்களுடைய பழைய மதமாகிய யூத மதம் ஒருபக்கத்திலே கிடக்கட்டும். இவர்கள் பெரிது பாராட்டிக் களிக்கும் கிறிஸ்துமதத்தைத்தானே ஆராய்வோம்.

கிறிஸ்துமதம் எப்படிப்பட்ட சனங்களிடத்திலே உற்பத்தியானது? நாகரிகம் சிறிதுமற்ற வலைஞமாக்களிடத்தும், அறிவிற்குறைந்த ஏழைச் சனங்களிடத்துமன்றோ அது உற்பத்தியானது?

சென்ற மாசத்திற் பிரசுரிக்கப்பட்ட ஒரு இந்திய பத்திரிகையிலே, கிறிஸ்துமதத்தின் உற்பத்தியைக் குறித்து ஒரு கிறிஸ்தவர் பின்வருமாறு எழுதுகிறார்:—

"Christianity arose in the greatest obscurity. Historians took no notice of Christ. His disciples were as obscure as Himself. Christianity spread among slaves and the lowest classes of society... ......Christianity spread among people so backward in the human family that many of them had remained up to that time in a state of barbarism."

(கிறிஸ்துமதத்தின் உற்பத்தி மிக அப்பிரசித்தமானது. சரித்திராசிரியர்கள் கிறிஸ்துவைப் பற்றி ஒருசற்றும் கவனிக்கவில்லை. கிறிஸ்துவுடையசீடர்கள் அவரைப்போலவே பிரசித்தமற்ற மனிதராய் இருந்தார்கள். கிறிஸ்துமதம் அடிமை வேலைக்காரரிடத்தும் அறியாமையுள்ள சனங்களிடத்தும் பரவிற்று. கிறிஸ்து மதம் மனுஷர்களுக்குள்ளே மிகக்குறைந்த அறிவுள்ளவர்களிடத்தில் பரவியபடியால், அவர்கள் எல்லாம், அக்காலம்வரையும்மிருகத்தன்மைவாய்ந்தவர்களாகவே இருந்தார்கள்.)

கிறிஸ்து பிறந்து மூன்றுநூறு வருஷம்வரையில் அதை ஒருவரும் பொருட்படுத்தவில்லை.

"It was not till three centuries after its foundation that a ruler, Constantine, became a Christian, and that was because Christianity had then won the masses."

(கிறிஸ்து பிறந்து மூன்றுநூறு வருடங்களுக்குப் பின்னே கொன்ஸ்தாந்தின் என்னும் ஒரு அரசன் கிறிஸ்தவன் ஆனான். அதுவும் சாமானிய சனங்கள் கிறிஸ்தவரானதுபற்றியே.)

என்றும் மேற்காட்டிய கிறிஸ்தவரே எழுதுகிறார்.

அறியாமையுள்ள சனங்களிடத்தில் உற்பத்தியான சமயம் அநுசரிக்கத்தக்கதன்றென்றால், ஏழைச்சனங்களும் பேதைச்சனங்களுமாகிய அல்பசனங்களிடத்திலே உற்பத்தியான கிறிஸ்துமதத்தைக் கைக்கொள்வதெப்படி என்று, சைவசமயத்தை மிருகவணக்கமாக்கிவிட மிகமுயற்சிசெய்யும் கிறிஸ்தவஞானிகள் சொல்வாராக.

கிறிஸ்துமதம் அறியாமைக்கோர் கொள்கலமானதுபற்றியன்றே ஆதியில் இருந்த கிறிஸ்த அரசர்கள் பூமியை உருண்டையென்று சாதித்தோரை அநியாயவதைசெய்தும், பின்னும் பல பௌதிக சாத்திரத் துணிபுகளை வெளியிட்டாரைப் பலவாறு குரூர தண்டம் செய்தும் அக்கிரமங்கள் செய்தார்கள். அல்லாமலும் அக்காலத்திருந்த குருமடங்களில் நிகழ்ந்த குற்சித சம்பவங்களும் துன்மார்க்கங்களுமே கிறிஸ்துமதத்தின் பூர்விக நிலைமை இனிது காட்டும்போது, அதனை ஒரு நாகரிகசமயம் என்றும், ஆதலால் அது அநுசரிக்கத்தக்கதென்றும் நம்முடைய கிறிஸ்த நண்பர்கள் சாதித்தற்கெழுந்திருப்பது எங்ஙனம் பொருந்தும்?

## சமாச்சாரம்.

தேவியுற்சவம்:—வண்ணை வைத்தீசுரர் கோயிலும் நல்லூர் நல்லைநாதசுவாமிகோயிலும் சென்ற திங்கட்கிழமை துவஜாரோகணமாகித் தேவிஉற்சவங்கள் நிகழ்கின்றன. இத்தமீ 17உ இரதோற்சவமும் 18உ யாகிய பூரநட்சத்திர புண்ணியதினத்தில் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

கிளேறிக்கற்பரீட்சை:-இப்பரீட்சை 1917ஆ ஜனவரிமீ 15உ ஆரம்பமாகி நிகழும்.

யுத்தம்ஆரம்பமானநாள்:—இப்போது நடக்கும் யுத்தம் 1914ஆ ஆகஸ்டுமீ 4உ ஆரம்பமாயிற்று. ஆகவே வருகிற ஆகஸ்டுமீ 4உ யோடு இந்த யுத்தத்தின் மூன்றும் வருடம் தொடங்குகின்றது.

நாய்வரி:—யாழ்ப்பாணச் சுகாதாரசங்க எல்லைக்குள் வளர்க்கப்படும் நாய்கள் இதுகாறும் 25 சதங்கொடுத்துப் பதியப்பட்டுவந்தன. இனிமேல் 1ரூபாக்கொடுத்துப்பதியப்படவேண்டுமென ஓர் புதிய பிரமாணம் ஏற்பட்டிருக்கின்றது.

இலங்கைச்சீனிக்கம்பனியார்:—இக்கம்பனியார் பங்கொன்று 100 ரூபா வீதமாக இன்னும் 10,000 பங்குகளேற்படுத்தி தங்கள் கம்பனியின் முதலை 20,00,000 ரூபாவாக்குதற்கு கொழும்பிலே ஓர் கூட்டம் இத்தமீ 29உ நடத்துவார்கள்.

"பைசிக்கிள்" வண்டி அபாயம்:—சந்தர்மடத்தடியில் ஓர் 'பைசிக்கிள்'வண்டி மாட்டுவண்டியொன்றுடன் அடியுண்டபோது 'பைசிக்கி'ளேறிச்சென்றவர் விழுந்து மாட்டுவண்டிச் சில்லுளகப்பட்டு அதிக காயமடைந்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார்.

புயலால் நேர்ந்த விபத்து:—சில தினங்களுக்கு முன்னர் வீசிய கடுங்காற்றுக் காரணமாக இளவாலையில் இருவரும், உடுப்பிட்டியில் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் ஒருகுழந்தையும், மரம் வீழ்ந்திறந்தனர். மேன்மாகாணத்திலேயுள்ள பல பகுதிகளில் இப்புயலால் பல உயிர்ச்சேதம் நேர்ந்ததாகத் தெரியவருகின்றது. மீன்பிடிக்கும்படி சென்றிருந்தோர் பலர் ஆழிவாய்ப்பட்டனர். அழுத்துகாமக்கோறளையைச்சார்ந்தவர்கள் 12 பேர், முத்வாலைச் சார்ந்தவர்கள் 53 பேர், சால்பிட்டிக்கோறளையைச் சார்ந்தவர் 15 பேர், களுத்துறையைச் சார்ந்தவர் 5 பேர், எல்லாமாக 95 செம்படவரின் கதி யாதெனத் தெரியவில்லையாம். சிலாபத்தைச்சேர்ந்த நமுனுக்காமா என்னுமிடத்துக்கு அணித்தாக 45 பிரேதங்கள் கடற்கரையில் வந்து அடைந்தனவாம். இன்னும் இப்புயல் காரணமாக பலவிடங்களிற் பல சிலமோசங்கள் நேர்ந்ததாகச் சமாசாரங்கள் வருகின்றன.

ஸ்ரீமாந் பொ. இராமநாதனவர்களின் உருவமைந்த சிலை:—இலங்கைவாசிகளின் பிரதிநிதியாயிருக்கும் ஸ்ரீமாந். பொ. இராமநாதனவர்களின் உருவமைந்த சிலை யொன்றைக் கொழும்பில் ஸ்தாபித்தற்குப் பலபிரபுக்கள் முயன்றிருக்கின்றனர். இவர் இவ்விலங்காதீபத்தின் நன்மைக்காக நெடுங்காலம் முழைத்திருக்கின்றனர். இவர் முதன்முதல் இலங்கைச் சட்டநிரூபண சபையில் தமிழ்ப்பிரதிநிதியாகி நமதுதேச நன்மையின் பொருட்டு அதிக முழைத்தார். பின் இலங்கைச் சொலிசித்தர் ஜெனரலாக நியமனம் பெற்று அதிக திறமையோடும் தமது கடமையை நடத்தினர். இப்போது இலங்கைவாசிகளின் பிரதிநிதியாகி ஆதிசேடனும் அஞ்சத்தக்க வாக்கு வல்லபமுடையராய் நமது தேசநன்மையின் பொருட்டு வாதாடிவருகின்றனர். இவரது திறமையையும் நாவல்லமையையும் நோக்குமிடத்து இவரை ஓர் அவதாரபுருஷரெனலாம். இத்தகைய மாண்பினையுடைய இவரது ஞாபகம் என்ஞான்றும் நிலைத்திருக்கும்படி ஓர் சிலையை ஸ்தாபிப்பது உசிதமேயாம்.

விசேட புகைவண்டிப் போக்குவரவு:—மாவிட்டபுரக் கந்தசுவாமிகோயில் தேர் தீர்த்தத்திற்குச் செல்லும் பிரயாணிகளின் வசதிப்பொருட்டு நிகழும் ஜூலாய்மீ 28-ம் 29-ம் திகதிகளில் விசேஷபுகைவண்டிகள் ஓடும்படி அரசினர் ஒழுங்கு செய்திருக்கின்றனர். 28உ வெள்ளிக்கிழமை பளையிலிருந்து காலை 5-மணி 55 நிமிஷத்தில் ஓர் புகைவண்டி புறப்பட்டு 7-மணி 45-நிமிஷம்வரையில்மாவிட்டபுரத்தையடையும். பின்னர் 11-மணி 30 நிமிஷம்வரையில் யாழ்ப்பாணத்திலிருந்து ஓர் புகைவண்டி புறப்பட்டு 12-மணி 10-நிமிஷம்வரையில் மாவிட்டபுரத்தையடையும். அன்று காலை 10-மணி 50-நிமிஷம்வரையில் மாவிட்டபுரத்திலிருந்துஓர்வண்டிபுறப்பட்டு 11-மணி 25நிமிஷம் வரையில் யாழ்ப்பாணத்தையடைந்து அங்குதானே தங்கும். பின்னர் பிற்பகல் 2-மணி 45-நிமிஷம்வரையில் மாவிட்டபுரத்திலிருந்து ஓர் வண்டி புறப்பட்டு நாலுமணி முப்பது நிமிஷம் வரையில் பளையையடையும். இருபத்தொன்பதாந் தேதி சனிக்கிழமை காலை 5-மணி 55-நிமிஷம்வரையில் பளையிலிருந்து ஓர் புகைவண்டிபுறப்பட்டு 7-மணி 45- நிமிஷம்வரையில் மாவிட்டபுரத்தையடையும். பின்னர் காலை 10-மணி 5-நிமிஷம் வரையில் ஓர் வண்டி மாவிட்டபுரத்திலிருந்துபுறப்பட்டு 10-மணி 40-நிமிஷம்வரையில் யாழ்ப்பாணத்தையடைந்து அங்கு தங்கிவிடும். பின்னர் பிற்பகல் 1-மணி 5-நிமிஷம் வரையில் ஓர்வண்டி புறப்பட்டு 2-மணி 48-நிமிஷம்வரையில் பளையையடையும்.

வைத்தியர் ஸ்ரீ. வை சங்கரப்பிள்ளையவர்களின் தேகவியோகம்:—முன் இந்துக்கல்லூரியில் ஓர் ஆசிரியராயிருந்தவரும், பின் வண்ணார் பண்ணையிலே ஓர் வைத்தியசாலையை வைத்து நடத்திவந்தவருமாகிய ஐயனார்கோயிலடி ஸ்ரீ. வை. சங்கரப்பிள்ளையவர்கள் நேற்றுக்காலை தேகவியோகமாகிவிட்டனர். இவர் சிவகாருண்ணியம் பெரிதுமுள்ள ஓர் சிறந்த வைத்தியர். எத்தனையோ ஏழைச்சனங்கள் இவரது சகாயத்தால் மிகச் சொற்பசெலவுடன் தங்கள்நோய்கள் தீரப்பெற்றுவந்தார்கள். தெய்வபக்தியும் சாந்தகுணமும் பெரிதுமுடைய இவ்வுத்தமரையிழந்து துன்புறும் இவரது சகோதரன் இந்துக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ சதாசிவம்பிள்ளையவர்களுடனும் சகோதரன் புத்திரன் அநுராசபுரக் கச்சேரிக் கிளார்க் ஸ்ரீ. அண்ணாமலை யவர்களுடனும், மருகர் ஆனைவெட்டி சைவாங்கில வித்தியாசாலைப் பிரதமாசிரியர் ஸ்ரீ. சோமசுந்தரம் பீ. ஏ. அவர்களுடனும் மற்றும் புத்திரமித்திராதியரோடும் நாமும் அநுதாபப்படுகின்றோம்.

யாழ்ப்பாணம் முஸ்லிம் சங்கம்:—இச்சங்கத்தின் கூட்டமொன்று சென்ற ஆனிமீ 27உ இரவு 9 மணியளவில் சங்கஸ்தானத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு சங்கத்தின் அங்கத்தினரும் மற்றும் அபிமானிகளாகிய கனவான்களும் சமூகங்கொடுத்தனர். அத்தருணம் மெஸ் ஏ. எஸ். இனயதுல்லா அவர்கள் கடமை என்னும் அரிய விஷயத்தைக் குறித்து எவர் மனதையும் கவரத்தக்கவோர் சிறந்த வுபந்நியாசம் செய்தனர். மெஸ்ஸர்ஸ் பி. எஸ். எப். லெப்பை, ஏ. எம். இனயதுல்லா, ஏ. எம். எஸ். அப்துல்காதிர் ஆகிய இவர்கள் குறிப்புரைகூறியபின், சபாநாயகர் மெஸ் ஏ.எம்.எம். மரைக்காயரவர்களின் பேச்சுடன் கூட்டம் முடிந்தது. கடித.

கதாப் பிரசங்கம்:—திருக்கோணமலை முத்துக்குமாரசுவாமிகோயிலில் ஆனி மாதம், 27உ திங்கட்கிழமையிரவு 7 மணி தொடக்கம் 11மணி வரையிலும் விருத்த குமார பாலரான திருவிளையாடற் சரித்திரத்தையும், 32உ சனிக்கிழமை இரவு 7 மணி தொடக்கம் பத்து மணிவரையில் நந்தனார் சரித்திர முதற்பாகத்தையும், ஆடிமீ 2உ திங்கட்கிழமையிரவு 6 மணிதொடக்கம் 10 மணி வரையில் நந்தனார் சரித்திர பிற்பாகத்தையும் பக்கவாத்திய சகிதமாக ஸ்ரீ நாகலிங்க சுவாமியவர்கள் பிரசங்கித்தனர். அத்தருணத்தில் பிரமஸ்ரீ சிவ. பஞ்சாட்சரக்குருக்களவர்களால் மேற்படி பிரசங்கத்தைப்பற்றிக் குறிப்புரை கூறப்பட்டது. கடித.

கோப்பறு:- இது இப்பொழுது கண்டி ஒன்று ரூபா 65 சதம் 50 விகிதம் விலைப்படுகின்றது.

வழக்குப்புத்தக மொன்றை எடுத்துச் சுட்டுவிடக் கைக்கூலி கட்டியது:—சில்வெஸ்றி பீரிஸ் என்றுமொருவர் தமது சகோதரன் ஒருவருக்கு விரோதமாகக் கொண்டுவரப்பட்ட வழியினல் வழக்கு விளக்கப் புத்தகத்தை எடுத்து எரித்துவிடுவதற்கு சுப்பிறீம்கோட்டு "றெக்கட்டீப்ப"ருக்கு பதினாயிரம் ரூபா கைக்கூலி கொடுப்பதாகச் சொன்னாரென ஓர் வழக்கு அவருக்கு விரோதமாகக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது.

யுத்தமும் மதுபான விலக்கும்:—ருஷியாவிலும் பிரான்சிலும் மதுபானம் இப்போது முழுதும் விலக்கப்பட்டிருப்பதுபோல இங்கிலாந்திலும் இந்த யுத்தகாலத்தில் அதனை முழுதும் விலக்கிவிடவேண்டுமெனப் பல பிரபுக்கள் சேர்ந்து ஆங்கில அரசுக்கு மனுப்பண்ணியிருக்கின்றனர்."

ரங்கூனில் புயலால் நேர்ந்த நட்டம்:—ரங்கூனில் சென்ற சனிவாரத்தன்று ஓர்புயல் வீசியபோது பர்மா எண்ணெய்க் கம்பனியாரின் கப்பல்களிரண்டிற்கு பெருஞ் சேதமடைந்தன. இவ்விபத்தா லுண்டாகிய நஷ்டம் ஏறக்குறைய ஒரு லக்ஷம் ரூபாவரையி லுண்டாம்.

ஸ்ரீ பாலகங்காதர திலகரவர்கள்:—இந்திய தேசாபிமானியாய்விளங்கும் ஸ்ரீ பாலகங்காதர திலகரவர்கட்கு நிகழும்ஜூலாய்மீ 20உ 60வயசு பூர்த்தியாகின்றது.குறித்ததினத்தில்அப்பூர்த்திக் கொண்டாட்டத்தை மிகு சிறப்பாய் நடத்தும் நோக்கமாக அவரது நண்பர்களும் பந்துக்களும் மற்றும் அபிமானிகளும் பல ஆயத்தங்கள் செய்கின்றனர். அச்சமயத்தில் அவருக்குச் சம்மானமாக 1லட்சரூபாகொடுக்கப்படுமாம்.

## தந்திச் சமாச்சாரம்.

(யுத்தசங்கதிகள்)

ஜூலைமீ 18உ.

மழையும் பனியும் இடைவிடாது பெய்கின்றமையால் சொம்னியிலே யுத்தம் நடத்திக்கொள்ள இயலாதிருக்கின்றது. ஆயின் 'டெவில்லேர்வ்ஸ்' என்னுமிடத்துக்கு வடக்கே ஆங்கில சைநியம் முன்னேறிச் சென்று சத்துருக்கள் அரண்செய்திருந்த பலவிடங்களைப் பிடித்துச் சிலரைக் கைதிகளாக்கிச் சிலதுப்பாக்கிகளைக் கைப்பற்றிற்று."

து ரேஸ்காட்டில் சத்துருக்களைத் துணைச்சேனை போகுமட்டும் எதிர்த்து நின்று யுத்தஞ்செய்த 'உவெஸ்ற்கென்ற்' பட்டாளத்தாரின் தொகை 100. இவர்கள் மீட்கப்படுமுன் சத்துருக்களில் 150 பேரைக்கொன்று 35 பேரைக் கைதிகளாகப் பிடித்தனர்.

தங்கள் தேசத்துக்குக் கப்பல்கள்போகாதபடி செய்ததா லதிக கஷ்ட முண்டாவதைக் கண்ட ஜர்மனியர் சப்மெறயின் கப்பல்களை யதிகப்படுத்தும் சுருக்குக்கொண்டிருக்கின்றனராம்.

'வேர்ஜினியா' என்னும் பிரிட்டிஷ் கப்பலும் மூன்று பெயயமீன்பிடிவள்ளங்களும் நீரிலமிழ்த்தப்பட்டன. தப்பித்தாலும் காயப்பட்டவர்கள் ஆறுபேருட்பட 47 பேரும் 'மோல்ற்ருவி' லிறக்கப்பட்டார்கள்.

ஐரிஷ் கலகத்திற் சம்பந்தப்பட்டவர்களென எண்ணப்பட்டுப் பிடிபட்டவர்களுள் 1174 பேர் அதில் தாம் சேரவில்லையென அத்தாட்சிப்படுத்தியால் விடுதலையடைந்தனர்.

'கேஸ்மென்ற்'என்பவரின் வழக்குச் சுப்பிரீம் கோட்டில் தள்ளப்பட்டுப் பாளிமெந்துபிரபுக்கள் சபைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது.

ஜூலைமீ 19உ.

சத்துருக்கள் டெல்வில்' காட்டின் ஒருபகுதியைத் திரும்பப்பிடித்து லோங்வில் என்னுமிடத்தில் வடபுறமாகச் சிறிது நுழைந்தார்கள்.

டெல்வில் காட்டிலும் லோங்வில்என்னுமிடத்திலும் பிரிட்டிஷ்காரர் இழந்தவிடங்களில் பெரும் பகுதியைத் திரும்ப அவர்கள் பிடித்தார்கள்.

லிப்பா ஆற்றின் கீழ்ப்பக்கத்தில் ருஷியர் ஜர்மனியரால் நன்கு அரண்செய்யப்பட்ட விடங்களூட் பத்துமைல் தூரத்திற்கு முன்னேறிச்சென்றார்கள். ருஷியரின் தென் அணியில் இப்போது 2,00,000 அவுஸ்திரியர் மாத்திரம் நிற்கிறார்கள்.

'றிக்கா'பக்கத்தில் ஜர்மனியர் தாமிழந்தஅகழ்களைப் பிடித்தற்குப் பெரும்பிரயாசையெடுத்தும் அனுகூலமடையவில்லை. 'வொல்கினியா' என்னுமிடத்தில் ருஷியரடைந்த வெற்றியின்பின் லிப்பா ஆற்றின்வடகரையிலிருந்து சத்துருக்கள் முழுதும் விலகிவிட்டனர். தென்கரையிலுள்ள சத்துருக்களின் ஸ்தானங்களில் ருஷியர் குண்டுகளைப் பொழிகின்றனர். சத்துருக்கள் அல்லோலகல்லோலப்பட்டுப் பின்காட்டினார்கள் என்பது அவர்களிடமிருந்து பிடிக்கப்பட்ட ஏராளமான யுத்தக்கருவிகளால் தெரியவருகின்றது.

ஜர்மன் ஆகாயக்கப்பல்கள் 'றிவல்' என்னுமிடத்தில் 13 குண்டுகளை வீசின. 'நீஸ்தர்' ஆறு பெருக்கெடுத்து எட்டடி உயரத்துக்கு எழும்பிப் பாய்கின்றது. ருஷிய சைநியம் 'கூற்றி'யென்னுமிடத்துக்குத் தென்மேற்குப் பக்கத்திலுள்ள மலைத்தொடர்களைக் கிட்டிச்சேருகின்றது.

மெசபொற்றேமியாவிலே சேனைகள் உணவுப்பொருள் யுத்தக் கருவிகள் முதலியனவற்றையேற்றிச் செல்வதைக் குறித்துச் செய்யப்பட்ட ஒழுங்கும், சேனைகளின் சௌக்கியத்தைக் காப்பாற்றுவதைக் குறித்துச் செய்யப்பட்ட ஒழுங்கும் தக்கனவல்லவென பாளிமேந்துச்சபைமுன் ஓர் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

ஜூலைமீ 20உ.

மெசபொற்றேமியாவிலே செய்யப்பட்டவைத்திய ஒழுங்கைப்பற்றி விரைவில் விசாரணைசெய்து அறிவிக்கும்படி இந்திய பிரதிகாவலருக்குத் தாமெழுதியிருக்கிறதாக மெஸ் சேம்பர் லேயினவர்கள் பாளிமேந்துச் சபையில் சொன்னார். மெசபொற்றேமியாவிலுள்ள சேனைகளின் சுகத்துக்கு என்னசெய்யக்கூடுமோ அதெல்லாம்செய்யப்படுமென்று மவர் சொல்லினர்.

டார்டனலீசிலும் மெசபொற்றேமியாவிலும் நடந்த யுத்தத்தைப்பற்றி விசாரணைசெய்து அறிவிப்பதற்குச் சில்லரை ஓர் கம்மிற்றியாக நியமிக்கவேண்டுமென சேர் கார்சனவர்களால் ஓர் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்த தீர்மானம் ஆலோசிக்கப்படவிருந்த நாளில் இதைக்குறித்துப் பெரும் வாக்குவாத முண்டாகுமென நினைந்து பாளிமேந்துச் சபையிலே பெரும் திரளானோர்கூடினர். அஸ்குவித்மந்திரியார் கடல் இராணுவ தரை இராணுவமந்திரிமார் யாவரும் மேற்குறித்த இடங்களில் நடந்த சண்டைகளைப்பற்றிப் பிரசித்தப்படுத்தல் தகாதெனக் கூறி நிற்கின்றார்களென்றும், ஆயினும் இது விஷயத்தைக் குறித்து அறிவதற்குச் சனங்களுளுண்டாயிருக்கும் ஆவலைக்குறித்து அரசாட்சியார் அறிவார்களென்றும், ஆகையால் சேர் கார்சனவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தைப்பற்றி அரசாட்சியார் குறைகூறவில்லை யென்றும், இக்காலத்தில் வாக்குவாதத்தை யுண்டாக்கி ஆங்கில பிரஜைகளுள் பிரிவினையுண்டாகி யிருக்கிறதெனப் பிரசுரஞ்செய்வது நல்லதல்லவென்றும், மெசபொற்றேமியாவில் சேனைகளின் சுகத்துக்கும் யுத்தத்துக்கும் வேண்டியனவெல்லாம் செய்யப்பட்டனவென அரசாட்சியார் முழுதும் நம்பியிருந்தார்களென்றும், முன் நிகழ்ந்த குற்றங்கள் குறைகளை மறைப்பதும் அக்குற்றங்கள் குறைகளைச் செய்த உத்தியோகஸ்தர்களைக் காப்பாற்றுவதும் அரசாட்சியாரின் விருப்பமல்லவென்றும், சிறியன் யுத்தத்தைப்பற்றி நிகழ்ந்த ஆலோசனை எவ்வளவுகாலம்நீடித்ததோ அவ்வளவு காலம் சேர் கார்சனவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கும் இந்த தீர்மானம் வாதிக்கப்படின் நீடிக்குமென்றும் சொல்லினர்.

மெசபொற்றேமியாவிலே 'குற்' என்னுமிடத்தில் பிடிக்கப்பட்ட ஆங்கிலசைநியம் எங்கே மதியற்படுத்தப்பட்டிருக்கின்றதென்பதை அறிய, கொன்ஸ்தாந்திநோப்பிளிலே அமெரிக்க தானுபதி கூடிய விசாரணைசெய்தும் அனுகூலமடையவில்லை.

ஜூலைமீ 21உ.

லோங்வில் கிராமத்தின் வட பக்கத்திலும் டெல்வில் காட்டிலும் மும்முரமான சண்டை நடைபெறுகின்றது. மற்றப்பகுதிகளில் யாதும் விசேஷமின்று. பிரிட்டிஷ் ஆகாயக்கப்பல்கள் இராப்பகலாகப் பல முக்கியமான விடங்களில் விசேஷமாய் றெயில்வே ஸ்தானங்களில் அநேக குண்டுகளை வீசின.

சத்துருக்களின் ஆகாயக்கப்பலொன்று அழிக்கப்பட்டது வேறுபல சேதமுற்றுக் கீழே இறங்கின. ஜூலைமீ 19உ தொடக்கம் நாலுபிரிட்டிஷ் ஆகாயக் கப்பல்களைக் காணவில்லை.

அமெரிக்க பிரசாதிபதியவர்கள் போலண்ட் தேசத்திலே உணவின்றி வருந்தும்சனங்களுக்கு உணவுப்பொருட்க ளனுப்புவதற்குச் சகல ஐரோப்பிய இராசாங்கத்தாரும் ஒருங்குசேரவேண்டுமெனக் கேட்டிருப்பதுமன்றி அவுஸ்திரியரும் ஜர்மனியரும் அனுப்பப்படும் பொருட்களை போலண்ட் சனங்களுக்கே கொடுப்பாரெனப் பொறுப்புப்பண்ணுவரேல் அப்பொருட்களை அவர்களது தேசத்துக்கூடாக அனுப்ப ஆங்கில பிரான்சிய ருஷிய இராசாங்கத்தார்சம்மதி கொடுக்கவேண்டுமென்றும் கேட்டிருக்கின்றனர்.

ஜூலைமீ 22உ.

ருஷியர் வேினு ஆற்றைக் கடந்து சென்றிருக்கின்றனரென ஜர்மனியிலிருந்து வந்த செய்தியால் தெரிய வருகின்றது.

ஸ்தேர் லிப்பா என்னும்ஆறுகள் சந்திக்குமிடத்தில் ருஷியர் 3000 பேரைக் கைதிகளாகப் பிடித்திருக்கின்றனர்.

ஜெனரல் ஷக்கரோவ் என்பவரின் கீழே நின்ற சைநியம் லிப்பா பள்ளத்தாக்குச் சேற்று நிலத்தைக் கடந்துசென்றபோது சத்துருக்கள் பொழிந்த குண்டுகளுக்கிலக்காயிற்றாயினும் அது ஆற்றைக்கடந்து பின்காட்டி ஓடின சத்துருக்களுக்கெதிரே குண்டுகளைப் பொழிந்து 1000 பேரைக் கைதிகளாக்கிப் பலபீரங்கிகளைக் கைப்பற்றிற்று.

சென்ற 12 மணித்தியாலங்களாக இருபக்கங்களிலுமிருந்து குண்டுகள் பொழியப்பட்டன. பிரிட்டிஷ் அணிக்கெதிரே பலவிடங்களில் சத்துருக்கள் நச்சுக் குண்டுகளைப் பிரயோகித்தார்கள்.

ஜூலைமீ 23உ.

ஜர்மனியர் இப்போது எதிர்த்து யுத்தஞ்செய்வது தாமிழந்த இடங்களைப் பின் பிடிப்பதற்கன்று. ஆனால் தங்கள் அணிகளுக்குப் பின்னே புதிய அரண்களைச் செய்துகொள்ளும் வரைக்கும் காலம் போக்குவதற்கேயென ஒருவரெழுதுகின்றனர்.

சோமகூட் என்னுமிடத்துக்குச் சமீபமாய் பிரிட்டிஷ் சைநியம் சத்துருக்களின் அணியை ஊடுருவிச்சென்றபோது வழியில் வெட்டப்பட்டிருந்த கிடங்குகளைக் கவனியாமற் சென்றது. அப்போது இக்கிடங்குகளில் மறைந்திருந்த ஜர்மனியர் துப்பாக்கிகளுடன் வெளிவந்து முன்சென்ற சைநியத்தைத் தாக்கினார்கள். இச்சைநியத்துக்குத் துணைச்சேனை யனுப்பக்கூடாமலிருந்தது. இச்சைநியத்திலதிக சேதமுண்டாயிற்று.

துருக்கியரின் ஆகாயரதங்கள் சுயெஸ் வாய்க்காலில் குண்டுகளை வீசின. 'தீவிக்' கோட்டையில் ஓர் குண்டு வீழ்ந்தது.

## கடிதம்.

### பழங்குடிக்கோர் விண்ணப்பம்.

பழங்குடியே!

"பாநுகாவலன்" பத்திரிகையில் சைவசமயத்தைக் குறித்துச் சிலகேள்விகள் கேட்டு அவைக்குத் தக்க விடையளிப்போர்க்கு 200 அல்லது 500 ரூபா வெகுமதி கொடுப்பதாகப் பிரசித்தம் பண்ணியிருந்தாயே! அவ்வினாக்களுக்கு யாரோ இப்பத்திரிகை வாயிலாக விடை கொடுத்திருந்தார்களே! அவ்விடை உன்னைத் திருப்திப் படுத்தவில்லைப்போலும்! கடித மூலமாகச்செய்யும் வாதம் பிரதிவாதம். யாவும் திருப்திக் கேதுவாயாய் வருவது மிகவரிது. ஆனபடியால் நீ என்னை ஒருவாறு சந்திக்கக்கூடுமாயின் உனது கேள்விகளெலாம் தக்க விடை கொடுத்து உன்சந்தேகங்களை நிவிர்த்திசெய்து வைப்பேன். அப்படிச் செய்யத் தவறுங்கால் யான் உனக்கு

ஆயிரம் ரூபா வெகுமதி

யுமளித்து அடிமைச்சீட்டும் முடித்துக்கொடுப்பேன். யான் ஒரு சன்னியாசியிருப்பதால் உன்னிடஞ் செல்லத் தகுதியற்றவனாயிருக்கிறேன். ஆனால் எனது பரம்பரையை நீ அறிவாயெனின் என்னை அலட்சியஞ் செய்யாது சமூகமளித்து வாதத்துக் குடன்படுவாயென்றே நம்புகிறேன். வேறுமொருவர் உன்னைப்போலவே ஆவேசங்கொண்டு நிரிந்ததையறிந்து நான் அவரை என் இருக்கைக்கு வரவழைத்து அவர் ஆவேசத்தைச் சமாப்தி செய்துவிட்டேன். இவ்விதமான நற்செய்கைகளைச் செய்வதே எங்குடியின் வண்மையென்றறிகுதி. மேலும்

"சண்பொட்டை யாயினுமப்பட்ட ஞன் கவிவாணர் முன்னே — பண்பட்ட செந்தமிழ் நீயுந் திடுக்கிடப்பாடுவனே"

என்று கவிவாணர் முன்னெதிர்த்த, நாவிதகுலவழிதந்தோன்றல் யான். யாழ்ப்பாணத்து மயிலிட்டியைச் சேர்ந்த முலவைக்குறிச்சியில் "பேய்க்கோவில்" என வழங்கும் அமெரிக்கன்மிஷன் பாடசாலைக் கணித்தாய் "புதுக்குடி" என்ற வளவில் வசிப்பவன். நீ என்னை எனது இருக்கையில் எந்நாளும் எக்கேரமும் சந்திக்கலாம்.

பழங்குடியே! நீ புதுக்குடியின் மாட்சிமையறியாய்! நீ என் "புதுக்குடி"யில் சற்றே நுழைவையாயின் உனது சந்தேகங்களெல்லாம் பரிதிகண்ட பனிபோற்பறந்துபோம். அப்பால் உனதாணக்கம் இல்லையென்பதை நீயே அறிந்துகொள்வாய்.

இங்ஙனம்,
உனது நன்மையைவிரும்பும்
வாயாசவர்ணி.

முலவை.
20-7-16.

## விளம்பரம்

ஓடுகளும் சிமெந்தும்

BEST PORTLAND CEMENT
TILE BRAND

பெருந் தொகையான ஓட்டு மார்க்குச் சிமெந்தும், பேர்பெற்ற மங்களூர் ஓடுகளும், இரட்டை யானை மார்க்கு ஓடுகளும் விலக்கிருக்கின்றன. வந்து பாருங்கள்.

யோசேப் அன் கம்பெனி,
தேவரீர்க் குளத்துக்கு முற்பக்கம்,
யாழ்ப்பாணம்.

### விஜய சீலம்.

மேற்கண்ட பெயரினையுடைய ஒரு சிறந்த நவீன கதை, "வீரசிங்கன் கதை" "உதிர பாசம்" முதலியவற்றின் ஆசிரியராகிய சி. வை. சின்னப்பாபிள்ளையவர்களால் சாதாரண வசனரூபமாக இயற்றப்பட்டு வெளிவந்திருக்கின்றது. இதன் பெருமை இதனை வாசிப்போர்க்கே நன்கு விளங்கும்.

வண்ணை ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திர சாலையிலும் வண் கிழக்கு சி. வை. சின்னப்பாபிள்ளையிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை பிரதி ௧-க்கு ரூபா ௧.

இலங்கை, இந்தியா தபாற்செலவு சதம் ௧௫.
தொலைவாய்ப்பகுதிக்கு " " ௨௫.

### சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளுமிதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே யிப்போது இந்தலேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப்பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலி வகைகள் சேர்த்துச் செய்யயபட்டிருக்கிறது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின்விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௰ அரைருத்தலுக்கு ரூபா ௧௰ கால் ருத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

விலாசம்:—

க. ஆறுகம்பிள்ளை,
ஆயுர்வேத வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதானை,
கொழும்பு.

### இதைக் கவனியுங்கள்.

உலகமெங்குங்கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

**1. கேர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.**
இது கெர்ப்ப ஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.
௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௧.

**2. தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.**
இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.
௨௨ நாள் மருந்தின் கிரயம் ரூ ௨, அணா ௮,

**3 பிரமேக வியாதிக்குச் சத்துச் செந்தூரம்.**
எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.
௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூபா ௨.

**4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.**
சரீரத்தின்எந்தஇடத்திலும் குடிக்குத்தும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகாண்டீபம். ஐந்துநிமிஷத்திற் குணமாகும்.
௧௪ மாத்திரை புட்டி ஒன்று ரூ ௧, அணா ௮.

**5. மேகசஞ்சீவிச் சூரணம்.**
மேகரோ யுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். ௨௨ நாள் மருந்து ரூ ௨.

**6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.**
அன்னத்துவேஷம், பித்தக்கிறுகிறுப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஔடதம்.
௧௧ நாள் மருந்தின் கிரயம் ரூ ௧, அணா ௮.

**7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்**
எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும் ௨௨ நாள் மருந்து ரூ ௨.

**8. மூலிகை ரத்தினத் தைலம்.**
அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ 1.

**9. பரிமள பற்பொடி.**
பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப்போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.
டப்பி 1 க்கு ரூ 0-4-0 டஜன் 1 க்கு ரூ 2-12-0.

**10. படர்மேக சங்காரி வெண்ணெய்.**
மேகநோயால் தேகத்தில்விழும் எவ்வித பத்துப் படைகளையும் ௩ வேளையிற் குணமாக்கும்.
டப்பி ௧-க்கு அணா ௪. டஜன் ௧-க்கு ரூ ௨, அ. ௮.
எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

### தவறுதீர்கள்! இதுசமையம்!! தவறுதீர்கள்!!!
### உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(௧) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்றும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன வயதுக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்ன விதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(௨) ௧. ஆயுட்பாகம், ௨. எந்தவிதத்தினால் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ௫. அது முன்னு பின்னு, ௬. புத்திரனுண்டா, ௭. தனம் வைத்துப் போவேனு, ௮. மரணமாகுமிடம் சுயதேசமா, ௯. சொந்தவீடு நிலம கிட்டுமா, ௰. கடன் எப்போது நிவிர்த்தியாகும, ௧௧. விவகாரம ஜெயமாகுமா, ௧௨. வினைத்தகாரியம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ ௧.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
௧௨ பாகம் சார்ஜ் ரூ ௫.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வி. பி. போஸ்தில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினாற் ஜோதிஷ, வைத்திய "கேட்லாக்" இனாமாக அனுப்புவோம.

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம், வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

---

### பனார்ஸ் பட்டுச்சேலை.

1. சிகப்பு, ரோஸ், பச்சை, புளு, ஊதா, வெளுர்ரோஸ், வெளுர்பச்சை, லைட்புளு, பின்க்கலர் இன்னும் பலமாதிரி நிறங்களில் உடல் பூராவும் பட்டில் பலவித பூ கொடி வேலைகள் செய்த சரிகை பனார்ஸ் கரை பனார்ஸ் முந்தி 16 முளம் சேலை ரூ 23 முதல் 25 வரை.

2. மேற்படிகரையில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்ட 16 முளம் சேலை ரூ 30 முதல் 35 வரை.

3. மேற்படி சரிகை பனார்ஸ்கரை உடல் பூராவும் சரிகைமத்தாப்பு பெரிய கொட்டடி 16முளம் சேலை ரூ 35 முதல் 40 வரை.

4. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முளம் சேலை ரூ 40 முதல் 45 வரை.

5. மேற்படி சரிகை பனார்ஸ்கரை உடல் பூராவும் சரிகைமத்தாப்பு சன்னக் கொட்டடி 16 முளம் சேலை ரூ 45 முதல் 50 வரை.

6. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முளம் சேலை ரூ 50 முதல் 55 வரை.

7. மேற்படிசரிகை பனாஸ்கரையில் உடல் பூராவும் சரிகை நக்ஷத்திர புட்டா போட்ட 16 முளம் சேலை ரூ 45 முதல் 50 வரை.

8. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் மத்தாப்பு முந்திபோட்ட 16 முளம் சேலை ரூ 30 முதல் 35 வரை.

9. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முளம் சேலை ரூ 35 முதல் 40 வரை.

10. மேற்படி மத்தாப்பு சரிகை கரையில் உடல் பூராவும் சன்னமாக மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முளம் சேலை ரூ 55 முதல் 60 வரை.

11. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முளம் சேலை ரூ 60 முதல் 65 வரை.

12. மேற்படி சாதா பனார்ஸ்கரையில் உடல் பூராவும் நெருக்கு ஊசி வாணம் மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முளம் சேலை ரூ 75 முதல் 80 வரை.

## சகாயவிலை! சகாயவிலை!!
# கல்யாண பட்டுச் ஜவுளிகள்.
### இந்தியர்களால் தயார் செய்யப்பட்டது.
### நம்பிக்கையும் நாணயமும் நயமுமுள்ள தினுசுகள்.

குறிப்பு.

மதுரையிலிருக்கும், மு. க. ராமய்யர் அன்சன்ஸ் ஜவுளி கம்பனியென்றால் உலகம் பூராவும் நன்றாய் அறிவார்கள். அனுபவம் பெற்றுத் தேர்ந்த நெசவுகாரர்களால் தயார்செய்து வருகின்ற விசேஷமான ஜவுளித் தினுசுகள்.

பாவிப்புக்கும் சலவைக்கும் பரிசுத்தமாகவும், டாம்பரமாகவும் விளங்கும்படியான மிகவும் உயர்ந்த சரிகை, சாய்ம், பட்டு நூல்களில் தயார் செய்யப்படுகின்றது.

ஒருமுறை எங்கள் கம்பேனி ஜவுளிகளைப் பாவித்தவர்கள் எப்போதும் எங்கள் ஜவுளிகளை உபயோகிக்க மனமுள்ளவர்களாயிருப்பார்கள்.

கல்யாணச்சடங்கு முதலிய விசேஷகாலத்தில் உபயோகிக்கும்படியான மேன்மைபெற்ற பட்டுச் ஜவுளிகளும் சாதாரணமாக எப்போதும் பாவிக்கக்கூடிய பல மாதிரி நூதன ஜவுளிகளும் ஏராளமாய்த் தயார்செய்யப்படுகின்றது. கொழும்பு, கண்டி, காலி, மட்டக்களப்பு, திரிகோணமலை, யாழ்ப்பாணம் ரெங்கூன், பினாங்கு, சிங்கப்பூர், கோலாம்பூர்முதலிய அனேக இடங்களிலிருக்கும் வியாபாரிகளுக்கும், கம்மிஷன் ஏசண்டுகளுக்கும் சொந்தப்பாவிப்புக்காரர்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்கும் பிரபுக்களுக்கும் தோட்டதுறக் கங்காணி கணக்கப்பிள்ளை கண்டக்டர் முதலிய யாவர்களுக்கும் எங்கள் கம்பேனி ஜவுளிகள் ஏராளமாய் அனுப்புகிறோம்.

இதுவரையிலும் எங்கள் கம்பேனியில் ஜவுளிகள் வாங்கி வருகின்றவர்களும் இனிமேல் வாங்குகிறவர்களும் அவரவர்கள் வளவிலும் அவரவர்கள் சொந்தக்காரர்கள் வளவிலும் சிநேகிதர்கள் வளவிலும் இப்போது நடக்கப்போகிற கல்யாணச் சடங்குகளுக்கும் முக்கியமாய்த் தேவையான கூறைப்புடவைகளும், நவுக்கைகளும், சால்வைவேட்டிகளும், இன்னும் பலமாதிரித் தினுசுகளுக்கும் முன்னுடியே எங்கள் கம்பேனிக்கு ஆர்டர்கொடுத்து விருப்பமுள்ள தினுசுகள் பெற்றுக்கொண்டு பெரும் லாபமும் நயமும் அடையவேண்டியது.

சில கூறைப் புடவைகளின் விலைகளும் தினுசுகளின் விபரமும் இதில் தெரிவித்திருக்கிறது. மற்றத் தினுசுகளின் விபரங்கள தெரிந்துகொள்ளவேண்டியவர்கள் கடிதமூலமாக விலாசந் தெரிவித்தால் கேட்லாக் இனாமாக அனுப்பக்கூடும.

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயவிலைக்குத் தேவையுள்ள தினுசுகள் அனுப்பக்கூடும்.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர, பினாங்கு முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் தபால் வி. பி. பார்சலாக அனுப்பக்கூடும்.

F. M. S. சைச்சேர்ந்த கோலாலம்பூர் முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் பாங்குமூலமாய் அனுப்பக்கூடும்.

### முக்கிய கவனிப்பு.

தேவையான நிறங்களும், விலையும், நம்பருங்கண்டு விபரமாய் எழுதவேண்டியது.

### (தொடர்ச்சி.)

13. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்டு மேற்படி உடல்சரிகைகொட்டடி 16 முளம் சேலை ரூ 80 முதல் 85 வரை.

14. மேற்படி கரையில் ரெட்டக்கரையாகவும் கரைக்குக் கொடிபேட்டுகள் வைத்த உடல்சரிகைகொட்டடி 16முளம் சேலை ரூ 85 முதல் 90 வரை.

15. மேற்படிமாதிரிக் கரையில் உடல் பூராவும் சரிகை ரெட்டக்கொட்டடி நெருக்கு ஊசி வாணக்கொட்டடி 16 முளம் சேலை ரூ 100 முதல் 120 வரை.

16 மேற்படி கரையில் உடல் பூராவும் சரிகைஜோட்டபணிவாணத்தார் கொட்டடி16முளம்சேலை ரூ 120முதல் 150வ.

17. மேற்படி ஒற்ற பனார்ஸ் கரையில் உடல் சரிகை கொட்டடியில்சரிகை புட்டா சேலை ரூ 75 முதல் 80 வரை.

18. மேற்படிமாதிரிஉடலில் கரைக்கு ரெட்டக் கரையாகவும் கொடிபேட்டுகள் வைத்த சேலை ரூ 100 முதல் 120 வரை.

19. காஸ்மீர் பட்டில் உடல் சாதா கரைக்கும் முந்திக்கும் சரிகைவேலை செய்த ரோஸ், சிகப்பு, பச்சை, ஊதா நிறமுள்ள சேலை ரூ 20 முதல் 25 வரை.

20. மேற்படி உடல் சரிகை புட்டா சேலை ரூ 27 முதல் 35 வரை.

### (கொர் நாட்டுப் புடவை.)

21. மேற்படிநிறங்களில் உடல் சாதா முந்தி சரிகைவேலை மானம் சேலை ரூ 17 முதல் 20 வரை.

22. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரைச் சேலை ரூ 20 முதல் 25 வரை.

23. மேற்படி சாதாக்கரையில் உடல் சரிகைகொட்டடிசேலை ரூ 25 முதல்30வ.

24. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரையில் உடல்சரிகை கொட்டடி சேலை ரூ 35 முதல் 40 வரை.

25. உடல் மஞ்சள் நிறம் ஜோட்டு பப்ளி, வைரிய பப்ளி, கூறை முகி சேலை ரூ 15 முதல் 25 வரை.

26. மேற்படி சுத்தப்பட்டு நயம் கொட்டடிசாயச்சேலை ரூ 25முதல் 30வரை.

27. மேற்படி கரைக்கும் முந்திக்கும் சரிகைபோட்டசேலை ரூ 30மு. 35வரை.

**மு. க. ராமய்யர் அன்சன்ஸ், மேலக்கோபுரவாசல், போஸ்ட் நம்பர் 48 மதுரை, தென் இந்தியா.**

**M. K. Ramier and Sons. West Tower St. Post No. 48 Madura, South India.**

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

☞ Printed and Published by S. KandiahPillai, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.